



<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை மாவட்டம்</u>
<u>மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்</u>

<u>மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம்,மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், சத்திரப்பட்டி ஊராட்சி, சத்திரத்தொண்டமான்பட்டி கிராமம், புல எண்:112/13,112/14A,112/14B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.</u>
<u>(திட்டமில்லாப்பகுதி)</u>

**ROC.NO :3691/ 2022 / SWP / XW40G6Z0**

அளவு : 1:400

வ

<u>குறிப்பு :</u>

மனைப்பிரிவின் பரப்பளவு - 1.06 ஏக்கர் (அ) 4300.00ச.மீ.

மனையின் எல்லை

நிலையிலுள்ள சாலை

உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு - 1630.66 ச.மீ.
(மூலை முடக்கு உட்பட)

மீதமுள்ள மனைகளின் மொத்த பரப்பளவு - 2669.34 ச.மீ.

கோரிய மனைகளின் எண்ணிக்கை - 25 மனைகள்

ஒதுக்கிய மனை எண்கள். 1-25 - 25 மனைகள்

<u>பொதுஒதுக்கீடு :</u>

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது:</u>

உத்தேச மனைப்பிரிவு சாலை (மூலை முடக்கு உட்பட) . 1630.66 ச.மீ

TANGEDCO ஒதுக்கப்பட்ட மனை (0.54%) : 14.50 ச.மீ

உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட மனை (0.64%) : 17.00 ச.மீ

அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்: 4367/2019-பிஏ2, நாள்: 05.02.2020, CASE-IV-ன்படி பூங்கா பரப்பளவு - 280.00ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு தொகையினை மனுதாரர் செலுத்தியுள்ளார்.)

<u>கட்டிட வரம்பு:</u>

7.2மீ மற்றும் 9.0மீ அகலச்சாலைகளுக்கு 1.5மீ விடப்பட வேண்டும்.

12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்.

<u>மூலை முடக்கு:</u>

12.0 மீ வரை உள்ள அகலச்சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1.அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16 ந.நி.(ம)கு.வ (ந.ப.1)துறை நாள்:31.01.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367 2019-பிஏ2, நாள்:05.02.2020 மற்றும் அரசாணை எண்:181. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை. நாள்:09/12/2020 ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலை, பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.மேலும் மேற்காண் அரசாணைகளின் படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும். அகலத்திற்கும் தார் சாலையாகவும் , தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்

2.இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்,இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், தனி அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3.நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

<u>குறிப்பு:</u> அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடபட்டுள்ளது.

ம.வ/மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்).எண்:41/2022.
(இணையதள ஒப்புதல்)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மதுரை மாவட்டம்.

Signature Not Verified